பொ.சு.ம (PHM) பிரிவானது ஒரு கிராம சேவகர் (கி.சே/GN) பிரிவை விட சிறயதாக இருத்தலாகாது என்பதுடன் அதன் எல்லைகள் எப்போதும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கி.சே (GN) பிரிவுகளின் எல்லைகளை தாண்டி இருக்க வேண்டும். இது நிர்வாகத் தேவைகள், துறைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு, மற்றைய கள பணியாளர்களுக்கிடையிலான தொடர்பு மற்றும் கண்காணிப்பு பொறிமுறைகள் என்பவற்றை வசதிப்படுத்தும். விதிவிலக்கான சந்தப்பங்களில் அதாவது கி.சே (GN) பிரிவின் சனத்தொகை எதிர்பார்க்கப்படும் பொ.சு.ம (PHM) இன் சனத்தொகையை விடவும் அதிகமாக இருக்குமானால் கி.சே (GN) பிரிவை விடவும் சிறிய பொ.சு.ம (PHM) பிரிவு அடையாளப்படுத்தல் அவசியமாகலாம். அச்சந்தர்ப்பத்தில் மீள் அடையாளப்படுத்தலானது தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட எல்லைகளை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். (தொகை மதிப்புத் தொகுதி ஒன்றுக்கான வரைவிலக்கணம்: 2001 தொகை மதிப்பு அறிக்கை குறிப்பிடுவதாவது ஒரு கி.சே (GN) பிரிவை விட சிறிய சுமார் 60 வீடுகளைக் கொண்ட தொகுதிகள்/ மற்றைய கிராமப்புற கட்டிடப் பிரிவுகள் மற்றும் 80 வீட்டுத்தொகுதிகள்/மற்றைய நகர்ப்புற கட்டிடத் தொகுதிகள். இந்த எல்லைகள் தொகை மதிப்பு வரைபட செயல்முறையின் போது கி.சே (GN) பிரிவின் துணைப்பிரிவாக வழங்கப்பட்டுள்ளன). பின்னர் குறிப்பிடப்பட்டது சம்பந்தப்பட்ட பிரிவின் கிராம சேவகரின் (GN) ஒப்புதலுடன் செய்யப்படுதல் வேண்டும். அடுத்தடுத்த தொகை மதிப்புத் தொகுதிகள் ஒரே பொ.சு.ம (PHM பிரிவாக எடுக்கப்பட்டு தக்க பெயர் வழங்கப்படுதல் வேண்டும்.

சுகாதார வைத்திய அதிகாரி (MOH) ஆனவர் தாய், சேய் நல சுகாதார வைத்திய அதிகாரி (தா.சே.ந.சு.வை.அ/MOMCH), திட்டமிடல் வைத்திய அதிகாரி (தி.வை.அ / MO planning), சமுதாய மருத்துவ ஆலோசகர் (ச.ம.ஆ/CCP) மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் (பி.சு.சே.ப/RDHS) ஆகியோருடன் கலந்துரையாடிய பின்னர் புதிய பொ.சு.ம பிரிவுகள் பற்றிய முன்மொழிவை தயாரித்தல் வேண்டும். இதில் சூழ்நிலை மதிப்பீடு, எதிர்பார்க்கப்படும் நன்மைகள், சேவை வழங்குநர் மற்றும் சேவை பெறுநர் ஆகியோர்களால் உள்ளகப்படுதல் வேண்டும்.

முன்மொழியப்பட்ட பிரிவின் நில வரைபடம் முன்மொழியப்பட்ட சேவை விநியோக மையங்கள் மற்றும் சனத்தொகை என்பவற்றுடன் உருவாக்கப்பட வேண்டும். இதற்காக இணைக்கப்பட்ட வடிவமைப்பை பயன்படுத்தவும்.

2. முன் மொழிவுக்கான ஒப்புதல்

பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவானது மேலதிக மறு சீராய்வுக்காக RDHS இற்கு அனுப்பப்படுதல் அவசியம். RDHS, CCP (மாவட்டம்), MOMCH ஆகியோருடன் சேர்ந்து புதிய பொ.சு.ம (PHM) பிரிவுகளை மறு சீராய்வு செய்தல் அவசியம்.